RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2167

# திருவிரிஞ்சைப் புராணத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

**சி. சதானந்தன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை-600106, தமிழ்நாடு, இந்தியா.

# Life Thoughts in Tiruvirinjai Puranam

**C. Sadhanandan [a, *]**

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: thensadha@gmail.com

Received: 19-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Myths provide life elements necessary for human life along with God as stories. The glory and history of the respective town is recorded through Talapuranas. In the Tiruvirinjai Puranam, Saiva Ellappa Navalar has described about the beauty of Tiruvirinjai village and about the pond, river and temple in the village.He has also explained the merits of Tiruvirinjai Puranam. The text also exemplifies the faith of the people in Thiruvirinjai Puranam. The people of the village believe even though if they kill the cows their sins will be perished if they worship the idols Markakasagayarai and Maragatavalli and if a blind man takes a dip in the temple pond he will get back his vision, if an infertile woman baths in the river she will give birth to a baby, one can attain eight types of siddhis if he baths in temple pond and so on. It also lists out of how not to worship God. Thiruvirinjai Puranam clarifies about the flow, union and the state of blissful salvation in the sensual life and conveys all the necessary messages for human life very well.

**Keywords:** Thalapuranas, Thiruvirinchai Puranam, Thiruvirinchaipuram, Tirunavukarasar, Sundarar

## முன்னுரை

உலகில் மக்கள் வளமாகவும் நலமாகவும் மகிழ்வாகவும் வாழ்வதையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். தங்களின் மகிழ்ச்சியான வாழ்விற்குத் தேவையானவற்றை அறவழியில் ஈட்டவேண்டுமே அன்றி அறத்திற்கு அப்பாற்பட்ட வழியில் ஈட்டக்கூடாது என்கின்ற பான்மை அனைவரிடமும் இருந்தால் உலகில் எங்கும் தீங்கு விளையாது. உலகில் அறவாழ்வை எவ்வாறு வாழ வேண்டும் என்றும் அறத்திற்கு மாறாக நடந்தால் எத்தகைய துன்பங்களைச் சந்திக்க நேரும் என்றும் தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் சொல்லிக் கொண்டே வருகின்றன. அறஇலக்கியங்கள் மட்டுமல்லாது பக்தி இலக்கியங்களும் அறவாழ்வு குறித்து ஆணித்தரமாக வலியுறுத்தியே வருகின்றன. தொன்மையான வரலாற்றைச் சொல்லும் நூல்கள் என்று போற்றப்பெறும் புராணங்களும் மாந்தரின் நல்வாழ்விற்குத் தேவையான அறங்களைப் பக்தியினூடே சொல்லித்தருகின்றன. அவ்வகையில் சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய திருவிரிஞ்சைப் புராணம் என்னும் நூல் நுவலும் வாழ்வியல் குறித்த கருத்துக்களை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புராணங்கள்

புராணங்கள் மனிதவாழ்வியலுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் ஒருங்கே தரும் மகத்தான பணியைச் செய்கின்றன. "வேதத்தின் வழிநூல்களாகிய புராணங்களில் இக் கடவுளை உணர்தற்கு ஸாதனங்களாகிய தவம், பக்தி, யோகம் முதலியனவற்றை அனுஷ்டிக்கும் நெறிகளும், இந்த வழியே செல்ல விரும்புவோனுக்கு இன்றியமையாதனவாகிய திடசித்தம், நேர்மை, ஜீவகாருண்யம் முதலிய குணங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும், நெறிகளும் இந்தக் குணங்கள் ஏற்படாதபடி தடுக்கும் பயம், கர்வம், கோபம், நிஷ்டூரம் முதலிய அசுர குணங்களை அறுக்கும் நெறிகளும் பல திருஷ்டாந்தங்களாலும், சரித்திரங்களாலும், உவமைக் கதைகளாலும், உபதேசங்களாலும் விஸ்தாரமாகக் காட்டப்பட்டிருக்கின்றன". (Bharathiar, 1998)

## தலபுராணங்கள்

தமிழ்நாட்டில் புராணங்கள் என்றால் தலபுராணங்களே நினைவுக்கு வருகின்றன. அவை தமிழ் இலக்கியத்தில் சிறந்ததோர் இடம்பிடிக்கின்றன. "நாடு போரில் புழுங்கிப் பட்டினியால் வாடி, உரிமை இழந்து, அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தபோழ்து இப்புராணங்கள் மக்கள் கருத்தழிந்து சாகாதபடி ஊக்கம் கொடுத்துத் தட்டி எழுப்பிப் புத்துயிரோடு மகிழ்ந்து உலவிவரச் செய்தன. சாவியாய்க் கிடந்த பட்டிகள் என்று தோன்றாதபடி ஒவ்வோர் ஊரினையும் இப்புலவர் கடவுளின் தனி அருள்பெற்ற நிலையங்கள் என்றும், இந்திரனும், சூரியனும், வருணனும், வாயுவும், சந்திரனும், கிரகங்களும் வந்து வழிபாடு செய்த புண்ணியக் கருவூலங்கள் என்றும் புகழ்ந்து, அப்பாழ் நிலங்களைப் பொன்விளைந்த களங்களாகப் பாவன்மை கொண்டு பாடித் தங்கள் கற்பனை நயத்தால் வானுலகிலும் சிறந்த பூலோக கைலாயங்களாகவும் வைகுந்தங்களாகவும் புனைந்து வைத்து மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி, அவர்களைச் சிறிது நம்பவும் செய்தனர். இந்த வகையில் மக்கள் தன்னம்பிக்கை இன்றித் தளர்ந்து சாகாதபடி காத்த பெருமை இந்தத் தலபுராணங்களுக்கு உண்டு. இந்தத் தலபுராணங்கள் கோயிலைப்பற்றி எழுந்தவையாதலின் கோயிலிலுள்ள பல தெய்வ வடிவங்களையும் கதை வடிவாக விளக்கி வைக்கின்றன". (Sanmugasundaram & Manikkam, 2007)

## தலபுராணங்களின் பயன்

"கி.பி.12 ஆம் நூற்றாண்டு முதலாக இத்தகைய தலபுராணங்கள் பல நமக்குக் கிடைக்கின்றன. இடைக்காலத்தில் நிகழ்ந்த அந்நியர் ஆதிக்கம், சமயப்பூசல்கள் ஆகியவற்றால் தளர்ச்சியுற்ற மக்களை எழுச்சி பெறச் செய்த இத்தலபுராணங்களின் இலக்கியப் பயன் அளவற்றதாகும். பொய்யர்களைப் பாடி வாடாதீர்கள் திருத்தலங்களைப் பாடுங்கள் இம்மையில் சோறும் ஆடையும் மறுமையில் சிவலோக ஆட்சியும் கிடைக்கும் என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

'தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும் சார்வினுந் தொண்டர் தருகிலாப்

பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!

இம்மை யேதரும் சோறுங் கூறையும் ஏத்த லாம்இடர் கெடலுமாம்

அம்மை யேசிவ லோகம் ஆள்வதற் கியாதும் ஐயுற வில்லையே'

என்னும் சுந்தரர் கருத்து இவண் சிந்திக்கத்தக்கது. தலபுராணங்கள் ஓர் இலட்சிய நாட்டைப் பற்றிய நோக்கைத் தருகின்றன இன்றைய ஊர்களின் பழைய வரலாறுகளை அறிய உதவுகின்றன. கோயில்கள் பற்றிய கருத்துக் கருவூலங்களாக விளங்குகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம், நோன்பு, விழாக்கள், வழிபாடுகள் இவற்றின் வழிமுறைகளை எடுத்துக் கூறுகின்றன இந்நூல்கள் பாமர மக்களையும் படித்த மக்களாக்குகின்றன நுண்கலைகள் வளர்ச்சிக்கு வித்திடுகின்றன அக்காலச் சிற்பம், ஓவியம், கட்டடக்கலை, இசை, நடனம், இலக்கியம் பற்றிய எண்ணங்களைத் தருகின்றன தலப்பயணங்களுக்கு ஊக்கமூட்டுகின்றன இவற்றால் நெடுஞ்சாலைகள், நீர்நிலைகள், தருமசாலைகள்,

இயற்கை வளங்கள் மேம்பாடடைகின்றன பாடல் பெற்ற பல தலங்கள் சீர்பெறுகின்றன அங்கங்கே கிடைக்கும் கல்வெட்டுகள், பழைய பாடல்களால் பல வரலாறுகள் வெளிப்படுகின்றன வசதியற்றவரும் வாழ வலுவூட்டுகின்றன கடையருக்கும் இங்குக் கடைத்தேற்றம் உண்டு பாவங்களுக்குப் பரிகாரம் உண்டு யானை, பூனை, பாம்பு, எறும்பு, பறவை, சிலந்தி, சிறுகுருவியும் பேறு பெற்றன, நாமும் பெறுவோம் என்ற நம்பிக்கையை ஊட்டுவன நாம் யாருக்கும் தாழ்வில்லை என்ற உயருணர்ச்சியைத் தருகின்றன". (Madhavan, 2005) திருவிரிஞ்சைப் புராணம் என்னும் தலபுராணம் திருவிரிஞ்சை என்னும் ஊருக்குரிய மேற்கூறிய சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே தொகுத்துத் தருகின்றன.

## திருவிரிஞ்சைப் புராணம்

பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப் பெறும் சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் திருவிரிஞ்சைப் புராணம் இயற்றினார். விரிஞ்சிபுரம் என்னும் சிற்றூர் வேலூருக்கு மேற்கே 13 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. விரிஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு வழித்துணைநாதர் (மார்க்கபந்தீஸ்வரர்) உடனாய அருள்மிகு மரகதவல்லி (மரகதாம்பிகை) தாயார் கோயிலை முதன்மையாகக் கொண்டு இத்தல புராணம் பாடப்பட்டுள்ளதால் திருவிரிஞ்சைப் புராணம் எனப் பெயர் பெற்றுள்ளது. விரிஞ்சன், விரிஞ்சி என்னும் சொற்கள் பிரமதேவனைக் குறிப்பதாகும். பிரம்மா வழிபட்டுப் பேறு பெற்ற இடம் (திருக்கோயில்) என்பதால் 'விரிஞ்சிபுரம்' என்று இவ்வூருக்குப் பெயர் அமைந்தது. மேலும் தனபாலன் என்னும் வணிகனுக்கு வழித்துணையாக இவ்வூரில் கோயில் கொண்டுள்ள வழித்துணைநாதர் (மார்க்கபந்தீஸ்வரர்) வந்தார் என்று திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது. இந்நூல் காப்பு, பாயிரம் உட்பட நைமிசாரணியச் சருக்கம், கௌரீபுரச் சருக்கம், விண்டுபுரி சருக்கம், கரபுரி சருக்கம், விரிஞ்சைப்புரி சருக்கம், வழித்துணை சருக்கம், பரலோகச் சருக்கம், பாலகனுக்குத் திருமுடி வளைத்த சருக்கம் என்னும் எட்டுச் சருக்கங்களாக 372 பாடல்களில் பாடப்பட்டுள்ளது.

## நம்பிக்கையும் காணிக்கையும்

இறைவன் மீது கொண்டிருக்கும் அளவுகடந்த பக்தியின் காரணமாக இறைவன் நம்மைக் காப்பான் என்ற நம்பிக்கை மனிதனுக்கு இருந்தாலும் ஏதாவது ஒன்றில் தீவிரமாக ஈடுபடுகின்றபோதோ அல்லது தனக்கு அச்சம் வருகின்றபோதோ காணிக்கை செலுத்தினால் இறைவன் நம்மை உறுதியாகக் காப்பான் என்று நம்பிக்கை கொண்டு வேண்டிக்கொள்கிறான். இறைவன் காணிக்கை கேட்கிறானா? என்ற பகுத்தறிவு வாதத்திற்குள் மனிதன் செல்வதில்லை. தனக்கான வேலை நல்லபடியாக நடக்க வேண்டும் என்கிற உணர்வினால் இறைவனுக்குக் காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொள்கிறான். அக்காணிக்கையானது பணமாகவோ, பொன்னாகவோ, பொருளாகவோ, தலைமுடியாகவோ அமையும். திருவிரிஞ்சைப் புராணத்தில் தனபாலன் என்னும் வணிகன் ஒருவன் மிளகு மூட்டைகளை இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்த நிகழ்ச்சியைச் சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் பாடியுள்ளார்.

அளகாபுரி என்னும் ஊரில் வாழ்ந்து வந்த தனபாலன் என்னும் வணிகன் மிளகு வாணிபம் செய்து வந்தான். அவன் வியாபார நிமித்தமாக மிளகு மூட்டைகளை எருதுகளின் மேல் ஏற்றிக் கொண்டு காஞ்சிபுரம் செல்லும் வழியில் பாலி (பாலாறு) ஆற்றங்கரையிலுள்ள விரிஞ்சிபுரத்திற்கு வந்தான். அங்குள்ள சில வணிகர்கள் காஞ்சிபுரம் செல்லும் வழியில் கொடிய வேடர்கள் வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவதாகக் கூறினர். இதைக் கேட்டுப் பயந்த தனபாலன், "விரிஞ்சிபுரம் வழித்துணை நாதரிடம், நான் கொண்டுவந்த மிளகு மூட்டைகளை வேடர்கள் பறித்துக் கொள்ளாதவாறு வழித்துணையாக வந்தால் பத்து மிளகு மூட்டைகளைக் காணிக்கையாக்குகிறேன்" என்று வேண்டிக் கொண்டான்.

"எய்த்துநொந்தவன் இறையவன் கோயில்முன் எய்தி

அத்தனே திருஅழகுற ஆடிய அமலா

வைத்தவான் பொதிபறிபடா வகைதுணை வந்தால்

பத்துவான் பொதிமிள(கு) உனதாம்எனப் பகர்ந்தான்" (Sanmugasundaram, 2008)

இறைவனும் தனபாலன் கனவில் தோன்றி நாளை உனக்கு நல்ல வழித்துணை வரும் என்று கூறி அவ்வாறே மறுநாள் ஒரு வாலிபனாக குதிரை மீதேறி தனபாலனுக்கு வழித்துணையாகச் சென்றார். பருத்திமலை சார்ந்த காட்டுப்பாதையில் தனபாலனைச் சோதிக்க எண்ணி மறைந்தார். அப்பொழுது வேடர்கள் வந்து தனபாலனிடமிருந்து மிளகு மூட்டைகளையும் எருதுகளையும் பறித்துச் சென்றனர். மிகவும் வருந்திய தனபாலன் விரிஞ்சிபுரம் வழித்துணை நாதரை நினைந்து வழிபட வழித்துணையாக குதிரை மீது வந்த வாலிபன் அவ்வேடர்களிடமிருந்து மிளகு மூட்டைகளையும் எருதுகளையும் மீட்டுக் கொண்டு வந்து தனபாலனிடம் ஒப்படைத்தான். அதைக்கண்டு மகிழ்ந்து அவ்வாலிபனுடன் காஞ்சிபுரத்திற்குத் தனபாலன் சென்றடைந்தான். பிறகு அவ்வாலிபன், "நான் என்னுடைய ஊருக்குச் செல்கிறேன். என்னை மறந்துவிட வேண்டாம். உண்மை உணர்ந்தவர்கள் என்னை 'மார்க்கசகாயர்' என்றழைப்பர்" என்று கூறிச் சென்றான். தனபாலன் மிளகு விற்பனை செய்யும் ஆர்வத்தில் வழித்துணைநாதருக்குக் கொடுப்பதாக இருந்த பத்து மூட்டைகளையும் சேர்த்து விற்பனை செய்துவிடுகிறான். அப்போது மிளகு வாங்கிச் சென்ற வணிகர்கள் தங்கள் வீட்டிற்குச் சென்று மிளகு மூட்டைகளைப் பார்த்தபோது அவை வெறும் பயறுகளாக இருப்பதைப் பார்த்துக் கோபம் கொண்டு தனபாலனிடம் வந்து காண்பிக்க, அப்போதுதான் தனபாலனுக்கு வழித்துணைநாதருக்குப் பத்து மூட்டை மிளகு கொடுக்காமல் அவற்றையும் விற்பனை செய்தது நினைவுக்கு வருகிறது. இறைவன் இதை நினைவூட்டவே மிளகுகளைப் பயறுகளாக மாற்றியிருப்பான் என எண்ணுகிறான். உடனே வழித்துணை நாதரை மனத்தில் தியானித்து இன்னும் ஒரு மூட்டையைக் கூடுதலாக தருவதாக மனத்தில் வேண்டிக் கொள்ள வணிகர்களின் மூட்டையிலிருந்த பயறுகள் முன்போலவே மிளகாகமாறின. வணிகரும் மகிழ்ந்து சென்றனர். அதன் பின்னர் தனபாலன் பதினோரு மூட்டை மிளகுகளை இறைவனுக்குக் காணிக்கை செலுத்த இறைவன் தனபாலன் கனவில் தோன்றி அம்மூட்டைகளைச் சிவனடியார்களுக்குத் தருமாறு கூறுகின்றார். தனபாலனும் அவ்வாறே கொடுத்தான்.

"பராவிய பொதிகளுக்குப் பதினொரு பொதிகள்தந்த

புராதன வணிகாஅந்தப் பொதிகளை விதியினாலே

அராவணி சடையான் அன்பர்க்(கு) அளித்திடுஎன்(று) அருளிப்போனான்

நிராமயன் உரைத்தவாறே அளித்தனன் நிதிக்குநாதன்" (Sanmugasundaram, 2008)

திருவிரிஞ்சைப் புராணம் கூறும் இக்கதையிலிருந்து, இறைவன் மீது மனிதன் கொண்டிருந்த நம்பிக்கையும் காணிக்கை அளிக்கும் பாங்கும் பண்டுகாலந்தொட்டே இருந்து வருகிற தொன்மையை நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

இறைவனை வணங்கினால் செய்த பாவங்கள் நீங்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். இறைவனை வணங்குபவர்களும் பக்தியும் அன்பும் கொண்டவர்களும் பசுவை உண்ணும் புலையராக இருந்தாலும் அவர்களே நாம் வணங்கத்தக்கவர்கள் என்று திருநாவுக்கரசர் பாடுகிறார்.

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்

ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்

கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்

அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே". (Thirunavukkarasar, 2008)

இவ்வாறே திருவிரிஞ்சைப் புராணமும், "பத்து இலட்சம் பசுக்களை வதைக்கும் மகாபாவிகள் ஆனாலும் திருவிரிஞ்சைத் தலத்தை அடைந்து மார்க்கசகாயரையும் மரகதவல்லியம்மையையும் பணிந்து வழிபட்டால் குற்றமற்ற மெய்ஞ்ஞானம் உண்டாக ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றல் பெற்று உயிரைப் பற்றிய ஆணவமலம் நீங்கிச் சிவகதியை அடைவார்கள்" என்று கூறுகிறது.

"ஆவில்ஆயிரம் ஆயிரம் தினம்தினம் அழிக்கும்

பாவியானவர் எனினும் அப்பதியினில் பணிந்தால்

நீவிலாத மெய்ஞ்ஞானியாய்ப் புலன்களை நிறுத்தி

ஆவிஆணவம் அகன்றிடச் சிவகதி அடைவார்" (Sanmugasundaram, 2022)

திருக்கோயிலின் அருகே உள்ள ஆறு, குளம் போன்றவற்றில் குளித்தால் பாவம் தீரும் என்றும் நோய்கள் அகலும் என்றும் மக்கள் காலங்காலமாக நம்பி வருகின்றனர். திருவிரிஞ்சைப் புரத்தில் திருமால் தன்னுடைய பெயரால் மாதவ தீர்த்தம் என்ற குளத்தை ஏற்படுத்தினார். "அக்குளத்தில் நீராடிய குருடரும் கண்ணொளி பெறுவர். மலடிகளும் மகப்பேறு எய்துவர். அத்தீர்த்தத்தின் பெருமை இவ்வளவு என்று சொல்ல இயலாது" என்று திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது.

"தந்த மாதவன் தடத்திலே தம(து)உடல் நனைத்தார்

தொந்த மாகிய பிறவியாம் கடலினில் துளையார்

அந்தகர் ஆனவர் முழுகினால் விழியுடைத் தாவர்

வந்தி யானவள் முழுகினால் பெறுகுவள் மகவை" (Sanmugasundaram, 2022)

திருவிரிஞ்சைக் குளத்தில் மூழ்கினால் பாவங்கள் விலகுவதைப் போல திருவிரிஞ்சைக்கு அருகில் ஓடும் பாலாற்றில் மூழ்கினால் முக்தி கிடைக்கும் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண்வகை சித்திகளும் (அட்டசித்தி) உண்டாகும் இப்பிறப்பிலும் முற்பிறப்பிலும் செய்த தீவினைகள் தீரும். பாலாற்று நீரினால் விளைந்த நெல்லரிசியன்னம் உண்டவர்கள் எல்லாம் முன்பு எப்பொழுதாவது உத்தமர் அல்லாதவர் வீட்டில் உணவு உண்டிருந்தால் அதனால் விளைந்த பாவமும் நீங்கும் என்று திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது.

"முத்தியைக் கொடுக்கும் பாலி நதியிலே முழுகினார்க்குச்

சித்தியும் எளிதாம்இம்மை மறுமையின் வினையும் தீரும்

அத்தகு நதியின்நீரால் விளைந்த நெல்லமு(து) உண்டாருக்(கு)

உத்தமர் அல்லார்இல்லத்(து) உண்ட தீவினையும் தீரும்" (Sanmugasundaram, 2022)

## இறைவனை வணங்கக் கூடாத முறைகள்

இறைவனை வணங்கும் போது இன்னின்ன முறைகளில்தான் வணங்க வேண்டும் என்கிற ஒழுங்குமுறைகளை மக்கள் தம் வாழ்வில் கடைபிடித்து வருகின்றனர். இம்முறைக்கு மாறாக இளைய சமுதாயத்தினர் செயல்படும் பொழுது இவ்வாறு செய்யக் கூடாது, இன்னவாறுதான் இறைவனை வணங்க வேண்டும் என்றும் பெரியவர்கள் அறிவுரை கூறுவர். ஆனால் அவ்அறிவுரையை இளையோர் வெறும் வாய்ச்சொற்களால் ஏற்றுக் கொள்வதில்லை. நீங்கள் கூறுவதற்கு எங்கே ஆதாரம் என்று கேட்பர். அவ்வாறு கேட்கும் இளைய சமுதாயத்திற்குத் திருவிரிஞ்சைப் புராணம் பதிலளிக்கிறது. எவ்வாறெல்லாம் இறைவனை வணங்கக் கூடாது என்று பட்டியல் போடுகிறது. 1. காலமல்லாத காலத்தில் கோயிலுக்குச் சென்று நெற்றியில் கண்ணுடைய சிவபெருமானை வணங்கக் கூடாது. 2. ஒரு கரத்தால் வணங்கக் கூடாது. 3. சிவபெருமானின் இடப்பக்கத்திலிருந்து வணங்கக் கூடாது. 4. மேலாடை அணிந்தவாறு பணிந்து வணங்கக் கூடாது. 5. கோயிலில் நந்திக்கு முன்னர் பணிந்து வணங்கக் கூடாது.

"காலம்அன்றிய பொழுதினில் பணிதல்ஓர் கரத்தால்

பாலலோசனர்ப் பணிகுதல் இடத்தினில் பணிதல்

மேலினில்கலை தன்னுடன் பணிகுதல் விடைமுன்

ஆலயத்தினில் பணிகுதல் பழு(து)இவை ஐந்தும்” (Sanmugasundaram, 2022)

## ஊடல்

மனித வாழ்வில் கணவன் மனைவியரிடையே ஊடல் நிகழ்வது எல்லா குடும்பங்களிலும் நடக்கும் இயல்பான ஒன்று. கணவன் மனைவியிடமோ அல்லது மனைவி கணவனிடமோ ஊடல் கொள்ளுகையில் இருவரும் அதை கூடலுக்கான வாயில் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமோ அன்றி அதனைப் பெருஞ்சண்டையாக நினைந்து இருவரும் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்து செல்லும் நிலைக்குச் செல்லக்கூடாது. வள்ளுவப் பெருந்தகை ஊடலுவகை என்று ஓர் அதிகாரம் வைத்து ஊடலின் இன்பங்களை வரிசைப்படுத்தி நிறைவாக,

“ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்

கூடி முயங்கப் பெறின்”

என்று கூறிச் செல்வதையும் நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். திருவிரிஞ்சைப் புராணத்தில் இறைவனும் இறைவியுமே ஊடல் கொள்வது போலவும் பின்பு தணிவது போலவும் திருவிளையாடல் புரிந்து மனிதர்களின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார்.

சிவபெருமான் சந்தனச் சோலையில் இருக்கின்றார். அவரைக் காண்பதற்காக உமாதேவியார் ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு வருகிறார். கோடி சூரியனைப் போன்று ஒளிவீசும் சிவபெருமான் சாமள நிறமேனி கொண்ட உமாதேவியாரின் திருமேனிப் பொலிவு கண்டு மகிழ்ந்து தம் கரங்களால் தழுவி அவருடைய கூந்தலில் மணம் நிரம்பிய மலர்களையும் சில இரத்தின ஆபரணங்களையும் அணிவித்தார். பின்னர் அமுதம் போன்றவளே, செல்வம் போன்றவளே என விளித்து, “கங்கையானவள் உன்னை யமுனை என்று ஐயம் கொண்டு சடையினின்றும் இறங்கிவிடுவாளே! காளியே உன் பேரழகு என் மனத்தை உருக்குகின்றது” என்று கூறினார்.

“மங்கை மேனியில் அழகெலாம் பார்த்(து)அரன் மகிழ்ந்து

செங்கையால் அணைத்(து)உரை செய்வான் அமுதமே திருவே

கங்கை யானது யமுனையாம் எனஉனைக் கருதிச்

சங்கை யாகுமே இறங்குமே சடையினும் தாழ” (Sanmugasundaram, 2022)

இதனைக் கேட்டவுடன் உமாதேவி மிகுந்த கோபம் (ஊடல்) கொண்டார். தனக்கு மாற்றாளான கங்கையை நினைவு கூர்ந்து அவள் தன்னைவிட்டுச் சென்றுவிடுவாளோ என்று ஐயப்படும் அளவில் தன்னுடைய தலைவன் இருக்கிறான் என்று உமாதேவி நினைந்தாள். தீயில் பாய்ந்த பாணம்போல சிவபெருமான் கூறிய வார்த்தைகள் அவளைச் சுட்டது. பாணம் ஏறுண்ட மயில்போல் மனம் வாடி சிவபெருமானிடம், “நீர் முன் உண்ட கருநிறம் பொருந்திய விடம் உம்மை மயக்கியதில்லை உம் தலைமீதிருக்கும் கங்கை நீராகிய விடமே இப்பொழுது உம்மை மயக்கியது” என்று கூறித் தம் வளையல்களை நொறுக்கியும் அணிகலன்களைச் சிதறியும் வண்டுகள் மொய்த்தலில் நீங்காத மலர்மாலைகளைக் கழற்றி வீசியும் எறிந்தாள்.

“உண்ட கார்விடம் மயக்கிய திலைஉம்மைத் தலைமேல்

கொண்ட நீர்விடம் மயக்கிய தெனப்பல கூறி

அண்டர் நாயகி தொடிகளை நெரித்(து)அணி சிதறி

வண்ட றாமலர்த் தொடைகளும் எறிந்தனள் வாங்கி” (Sanmugasundaram, 2022)

இவ்வாறு ஊடல் கொண்ட உமாதேவியைப் பல்வேறு புகழுரைகளைக் கூறி சிவபெருமான் சமாதானப்படுத்துகிறார். உமாதேவியும் சமாதானம் ஆகாததுபோல் தன்னிடம் பேச வேண்டாம்,

அச்சொல்லை விடும் விடும் என்று தொடர்ந்து கூறி ஊடல் கொள்கிறாள். பின் தணிகிறாள் என்பதைச் சைவ எல்லப்ப நாவலர் காட்டுகிறார்.

சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, "என்னால் யாதொரு குற்றமும் நேரிட்டதில்லை என் சொற்களில் குற்றம் இருப்பின் அதனைப் பொருத்தருள்க உன்னிடத்தில் விருப்பம் கொண்டு கூறும் சொற்கள் விடம் பொருந்திய கண்டத்தினின்றும் வருகின்றமையால் உனக்குக் கொடுமை போன்றிருக்கின்றன" என்றார். அம்மையார், "சூரியனையும் சந்திரனையும் இருகண்களாக உடையவரே, தாங்கள் கூறிய சொற்களை விட்டுவிடும்" என்றார். பின்னர் சிவபெருமான், "மான்விழிபோல் பார்வையுள்ள உமையவளே, ஏன் இந்தக் கோபம் நீடித்தது" என்றார். "அப்படியானால் மானைக் கொல்லத்தக்க புலியின்தோலை உடுத்தியவரே, அந்தச் சொல்லை விட்டுவிடுவீராக" என்றார். சிவனார் மீண்டும், 'மயிலை ஒத்த சாயலை உடையவளே கோபம் ஆகாது' எனக்கூற அம்மயிலுக்குப் பகையாகிய பாம்பை அணிந்த தோள்களை உடையவரே, 'அச்சொற்களை விடும் விடும்' என்றார். இவ்வாறு சிவபெருமான் வேண்ட வேண்ட, ஊடலைத் தவிர்த்துவிட்டது போல மொழிகள் நவின்று வந்த அம்மையார் கோபம் தணிந்து சிவபெருமானை நோக்கி, "கங்கை, நீரின் வடிவமாகும் சடைமுடியும் திருமேனியும் தீயின் வடிவமாகும் இவ்வாறிருக்கையில் உங்களை நான் பற்றுவது எவ்வாறு" எனக் கேட்க, பரமசிவனார் புன்னகையுடன் முந்தானையைப் பற்றினார் (Sanmugasundaram, 2008). என்பதாக சிவபெருமான், உமாதேவியார் ஊடல் கூடலைத் திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது.

## பகை சிறியதாக இருக்கும் போதே அறுத்தல்

மனிதர்கள் தங்களுடைய வாழ்வில் ஏதேனும் ஒரு காரணம் பற்றியோ அல்லது அரசராயிருப்பவர் எல்லை விரிவாக்கல் என்னும் காரணம் பற்றியோ அயலவருடன் பகை கொள்வர். அவ்வாறு நம்மிடம் வரும் பகையை நாம் சிறியதாக இருக்கும் போதே அழித்துவிட வேண்டும்.

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து"

என்று வள்ளுவப் பெருந்தகையும் பகையை முதிர்ச்சியடையவிடாமல் இளமைத் தன்மையிலேயே அழித்துவிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இதனையே திருவிரிஞ்சைப் புராணமும் வலியுறுத்துகிறது. அஃதாவது, 'முட்செடிகளையும் விடத்தையும் தீயினையும் அவைகள் வலிமையுடையதாய்ப் பெருகி அவற்றால் துன்பம் பெருகுதலுக்கு முன் முழுமையாக அழித்துவிட வேண்டும்' என்பதாகும்.

"முட்செடியை நஞ்சைஅழல் தன்னை

ஏதமொ(டு) அழிப்ப(து)உரம் எய்துவதன் முன்னே" (Sanmugasundaram, 2022).

## முக்தி

மனிதவாழ்வின் நோக்கமே முக்தி அடைதலாகும். ஆயிரம் இன்பதுன்பங்களை வாழ்க்கையில் அடைந்தாலும் அவற்றினின்றி நீங்கி இறைவனின் திருவடிப்பேறு அடைந்து மீண்டும் பிறவாத நிலையை அடைய வேண்டும் என்பதே மாந்தரின் பேரெண்ணமாக இருந்து வருகிறது. இந்நிலையில், "வேதத்தை ஓதினால் தேவருலகத்தை அடையலாம் சிவாகமம் ஓதினால் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் பதங்களும் கிடைக்கும்" என்று திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது.

"ஓதினான் மறையளித்திடும் இமையவர் உலக

நாதன்ஆகமம் படித்தபேர்க்(கு) உறுங்கதி நாலும்" (Sanmugasundaram, 2022).

மேலும் சிவபுராணங்களைக் கேட்கும்பொழுது மீண்டும் பிறப்பு வராது என்று வசிஷ்டர் நைமிசாரணிய முனிவர்களுக்கு உரைப்பதுபோல் நமக்கு உரைப்பதைத் திருவிரிஞ்சைப் புராணம் கூறுகிறது.

## முடிவுரை

மனிதரின் வாழ்வியலுக்குத் தேவையான வரையறையை அறஇலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் புராண இலக்கியங்களும் மிகவும் சிறப்பாகத் தருகின்றன. சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய திருவிரிஞ்சைப் புராணமும் வாழ்வியல் கூறுகளை ஆழமாக வலியுறுத்திச் சொல்கிறது. மேலும் திருவிரிஞ்சைபுரம் ஊரின் சிறப்பையும் அவ்வூரில் ஓடும் பாலாற்றின் சிறப்பையும் குளத்தின் சிறப்பையும் அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் மார்க்கசகாயர், மரகதவல்லித் தாயார் சிறப்பையும் கூறுகிறது. இக்கட்டுரையின்கண் புராணங்கள், தலபுராணங்கள், தலபுராணங்களினால் விளையும் பயன், மனித வாழ்வில் நம்பிக்கை, காணிக்கை, கோயிலில் எவ்வாறு வணங்கக் கூடாது, ஊடல் கூடல், பகை சிறியதாக இருக்கும் போதே அறுத்தல் முக்திப் பேறு ஆகியவை குறித்துத் திருவிரிஞ்சைப் புராணம் கூறும் செய்திகள் குறித்து விளக்கமுறைத் திறனாய்வில் ஆராயப்பட்டன.

## References

Bharathiar, (1998) Bharathiar Katturaikal, Vanathi Pathippagam, Chennai, India

Madhavan, R.V. (2005) Thiruvavaduthurai Puranam, International Institute of Tamil Studies, Chennai, India

Sanmugasundaram, Manikkam (2007) T.P.M. Kalanjiyam, Kavya Veliyedu, Chennai, India

Sanmugasundaram, S. (2008) Saiva Ellappa Navalar Eyatriya Thiruvirinjaip Puranam, V Anantha Sundararajan Pathippaga, Vellur, India

Sanmugasundaram, S. (2022) Saiva Ellappa Navalar Eyatriya Thiruvirinjaip Puranam, V Anantha Sundararajan Pathippaga, Vellur, India

Thirunavukkarasar, (2008) Thevaram, Aaram Thirumurai, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License